செ.வெ.எண்: 16 – 2020 நாள்:11.07.2020

**விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சி முகமை மூலம் நடைபெற்றுவரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (11.07.2020) விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றித்திற்குட்பட்ட கோவில்பட்டு ஊராட்சியில் ஊரக வளர்ச்சி முகமை மூலம் நடைபெற்று வரும் பணிகளான பொதுமக்களுக்கு குடிநீர் தேக்க தொட்டியின் வாயிலாக குடிநீர் வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு அனைத்து தெருக்களும் குடிநீர் குழாய் இணைப்பு வசதி ஏற்படுத்திட வேண்டும். மேலும், குடிநீர் குழாய் இணைப்பு உள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து கல்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர். தொடர்ந்து அப்பகுதியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள் கட்டுவதற்கான இடத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து பெரும்பாக்கம் ஊராட்சி குளத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை நிர்வாக ஆதார பாதுகாப்பு நீர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் குடிமராமத்துப்பணிகள் ரூ.1.26 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று முடிவுற்ற பணிகளை பார்வையிட்டு ஏரியின் கரைப்பகுதிகளை சுற்றி மரக்கன்றுகளை நட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.முத்தமிழ்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திரு.ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.**